சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No. 26/2016

பெயர் திரு. அரசு நாள்.23.03.2026
த/பெ. சீனிவாசன்

**12ம் பிரதிவாதி சாட்சி 1 (DW2) அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வழக்கு சொத்தின் புல எண்கள் 82 மற்றும் 83 ஆகும். வழக்கு சொத்தின் அளவுகள் எனக்கு தெரியாது. காத்தாடிக்கு சொத்து எவ்வாறு பாத்தியம் என்பதற்கு என்ன ஆவணம் பார்த்தேன் என்றால், ஆவணம் ஏதும் பார்க்கவில்லை. காத்தாடி எப்போது இறந்தார் என்று எனக்கு தெரியாது. அவரின் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் பார்த்ததில்லை. எனவே அவருக்கு யார் யார் வாரிசு என்று தெரியாது என்றால் சரிதான். கற்பகத்திற்கு யார் கிரையம் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அதனால் அவர் கிரையம் வாங்கியது பற்றி எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல.

2. முதல் விசாரணையில் 1950 சதுர அடி எந்த தேதியில் கிரையம் வாங்கினேன் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த கிரைய ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை. நான் எவ்வித கிரையமும் வாங்கவில்லை என்றாலும், பிரதிவாதி ஆதரவால் பொய் சாட்சியங்களை கூறினேன் என்றால் சரியல்ல. நான் 12 ம் வகுப்பு படித்துள்ளேன். முதல் விசாரணையில் தாய் வழிசொத்தில் வாதிகள் பாகம் கோர இயலாது எதன் அடிப்படையில்

குறிப்பிட்டுள்ளேன் என்றால் எனக்கு தெரியாது. சொத்து மதிப்பை காட்ட கூடிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை. 7 ம் பிரதிவாதிக்காக பொய் சாட்சி கூறினேன் என்றால் சரியல்ல.

**7 மற்றும் 13 ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.**